## சுருக்கம்

வேளாண்மை - தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை - மாநில திட்டம் - ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் – 2011-12ம் ஆண்டு ரூ. 56,785/- க்கான காசோலை காசாக்கப்படாமல் அரசு கணக்கில் செலுத்தப்பட்டது - மீள நிதி ஒதுக்கீடு வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மைத் (தோக2) துறை

அரசாணை (நிலை) எண். 211 நாள்: 12.07.2016

திருவள்ளுவர் ஆண்டு 2047
ஆனி திங்கள் 28ம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 228, வேளாண்மை (தோ.க.2)த் துறை, நாள். 28.11.2011.
2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் கடித எண். மாதிபி2/19145/14, நாள். 26.12.2015 மற்றும் 29.03.2016.

***********

2011-2012ம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 01.04.2011 முதல் 31.03.2012 முடிய 50 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிர்கள் மற்றும் காய்கறி விதைகள் வாங்கி வழங்கிட ரூ. 378.15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள், 2011-12ம் ஆண்டு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தோட்டக்கலை துணை இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களுக்கு காய்கறி விதைகள் NHRDF (National Horticulture Research and Development Foundation) நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டது என்றும், மேற்படி விதைகள் வழங்கப்பட்டமைக்கான தொகை ரூ. 56,785/-க்கு காசோலை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது என்றும், ஆனால் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காசோலை காணாமல் போய்விட்டதாக அந்நிறுவனம் தெரிவித்து மேற்படி தொகைக்கு காசோலை மீள வழங்க தோட்டக்கலை துணை இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களை கோரியுள்ளதாகவும், மேற்படி காசோலைக்கான தொகை அரசு கணக்கில் சேர்க்கப்பட்ட விபரத்தை மாநில கணக்காயரும் உறுதி செய்துள்ளார் என்றும், எனவே, அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுவிட்ட தொகையினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கும் பொருட்டு 2016-17ம் நிதியாண்டில் கூடுதல் நிதியாக ரூ. 56,785/- நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, 2011-12 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத் துணை இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களுக்கு NHRDF நிறுவனத்தின் மூலம் காய்கறி விதைகள் வழங்கியமைக்கு அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காசோலை காணாமல் போனதால், மேற்படி நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய தொகை ரூ. 56,785/- ஐ (ரூபாய் ஐம்பத்தாறாயிரத்து எழுநூற்று எண்பத்தைந்து மட்டும்) 2016-17ம் நிதியாண்டில் வழங்க ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

(த.பி.பா.)

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

2401-00-Crop Husbandry – 119 Horticulture and Vegetable Crops – Schemes in the Twelfth Five Year Plan – II State Plan – JX – Development of Horticulture in Districts – 69 Procurement of Agricultural Inputs (DPC 2401-00-119-JX-6901)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2016-17-ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினத்தை 2016-17 திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதி (வேளாண்) துறைக்கு அனுப்புமாறு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை காசோலையாக்கி NHRDF நிறுவனத்திற்கு வழங்கிட இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண். 36099/நிதி (வேளாண்மை) துறை/ 2016, நாள். 08.07.2016 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 432 (நானூற்று முப்பத்து இரண்டு) இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ககன்தீப் சிங் பேடி,**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை - 5.
தோட்டக்கலை துணை இயக்குநர், காஞ்சிபுரம்.
மாநில முதன்மை கணக்காயர் (G&SSA) & (E& RSA),
361, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 18 / (பெயரில்)
இருப்பிடத் தணிக்கை அலுவலர்,
முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம் (G&SSA),சென்னை -9 / (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை - 8.

**நகல்**
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
வேளாண்மைத் துறை, சென்னை - 9.
நிதி (வேளாண்மை / வ.செ.பொ.II)த்துறை, சென்னை - 9.
வேளாண்மைத் (பொது) துறை, சென்னை - 9.
இருப்பு கோப்பு / உதிரிகள்.
தொடர்பு கோப்பு எண். **31879/தோ.க.2/2015**

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

**பிரிவு அலுவலர்**